செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்
30.07.2020 அன்று மற்பகல் 4.00 மணிக்கு
நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள்

தலைமை திரு. ந. சோ. [illegible] எம்.இ.,
தனி அலுவலர்

மன்றப்பொருள்.. 1/7

செங்கோட்டை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் 13 எண்ணம் கொள்முதல் செய்யப்பட்டு நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது 1 1/2 ஆண்டுகள் கழிந்து விட்டதால் பெரும்பாலான வாகனங்களில் உள்ள பாட்டரிகள் பழுதாகி வாகனங்கள் இயக்க முடியாத நிலை உள்ளது. இதனால் பொது சுகாதார பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் தற்சமயம் பேட்டரி வாகன எண். 1,2,3,7 மற்றும் 9 ஆகிய வாகனங்களுக்கு மட்டும் புதிதாக பேட்டரி கொள்முதல் செய்து பொருத்தவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு.. 1/7

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்.. 2/7 2/7 8/9/20

செங்கோட்டை நகராட்சி வல்லம் சாலையில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில், நகர்மன்ற தீர்மான எண். நாள்.. 08.2020ல் குடிநீர் வசதி, மின விளக்குகள் அமைக்கும் பணி, தீ அணைப்பு ஹோஸ் மற்றும் காலர் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 08.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| செங்கோட்டை நகராட்சி வல்லம் சாலையில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் வசதி, மின் விளக்குகள் அமைக்கும் பணி, தீ அணைப்பு ஹோஸ் மற்றும் காலா அமைக்கும் பணி | ரூ. 9.00 | திரு.எஸ்.பரமசிவன் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு.தா.ஆபேல் ஜெயசீலன் | 0.34 % மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலககுறிப்பு.

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக மதிப்பீட்டை விட 0.01% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பரமசிவன் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

249

மன்றப்பொருள்.

செங்கோட்டை நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன் கீழ் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.எம்.முகம்மது அபூபக்கர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு, தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்கள் செயல்முறை ஆணை எண். அ8/5044/2019, நாள். 21.07.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 18.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி மேலூர் பம்புகவுஸ் ரோட்டில் பல்நோக்கு கட்டிடம் அமைத்தல் | ரூ.7.50 | திரு.எஸ்.பரமசிவன் | 0.47% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலககுறிப்பு.

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விகிதமாக 0.05% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.தா.ஆபேல்ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

250

மன்றப்பொருள்.

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.19 கே.சி.சாலையில் இருந்து பம்புஹவுஸ்க்கு செல்லும் சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகாலின் பக்கச்சுவர் தாழ்வாக இருப்பதை சாலையின் மட்டத்திற்கு உயர்த்தி கட்டுவதற்கு நகர்மன்ற தீர்மான எண். நாள். அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.19 கே.சி.சாலையில் இருந்து பம்புஹவுஸ்க்கு செல்லும் சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகாலின் பக்கச்சுவர் தாழ்வாக இருப்பதை சாலையின் மட்டத்திற்கு உயர்த்தி கட்டுதல் | ரூ.2.20 | திரு.எஸ்.பரமசிவன் | 0.44% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலககுறிப்பு.

பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.03% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.தா.ஆபேல்ஜெயசீலன் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

251

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக, 7 வது மாநில திட்டக் குழு பரிந்துரைத் திட்டத்தின் கீழ் 11 பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் மற்றும் 8 வது மாநிலை திட்டக்குழு பரிந்துரைத் திட்டத்தின் கீழ் 2 போட்டரி மூலம் இயங்கும் வாகனம் மற்றும் 2 இலகு ரக வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 1460/2020/ஆ2, நாள். 11.09.2020–ல் மேற்படி பொது சுகாதார வாகனங்களின் பராமரிப்பினை வருடாந்திர ஒப்பந்த முறையில் பராமரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் உள்ள 13 பேட்டரி மூலம் இயங்கும் வாகனத்தையும், 2 இலகு ரக வர்த்தக வாகனத்தையும் வருடாந்திர ஒப்பந்தமுறையில் பராமரிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் 5 எண்ணத்திற்கான பேட்டரி பழுதடைந்துள்ளதிற்கு புதிதாக பேட்டரி கொள்முதல் செய்து பொருத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 16.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வாகனங்களின் எண்ணிக்கை | பணியின் விவரம் | செலவராம் எண்டர்பிரைசஸ், திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | | | மெஸர்ஸ். சாப் சிஸ்டம், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை விவரம் | ஒரு வாகனத் திற்கு | மொத்தம் | விலை விவரம் | ஒரு வாகனத் திற்கு | மொத்தம் |
| 5 வாகனங்களுக்கு | பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களுக்கு பேட்டரி விநியோகம் செய்து பொருத்தும் பணி மேற்கொள்ள(பழைய பேட்டரி எடுத்துக் கொண்டு) | 49800/– | | 249000/– | 43700/– | | 238500/- |

அலுவலககுறிப்பு..

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விகிதமாக ஒரு வாகனத்திற்கு பேட்டரி பொருத்த ரூ. 43700/–ம், 5 வாகனங்களுக்கு பேட்டரி புதிதாக பொருத்த ரூ. 2,38,500/–ம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள மெஸர்ஸ். சாப் சிஸ்டம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள். 7

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்துடன் வரப்பெற்ற தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் 2020-2021ம் ஆண்டுக்கான இந்நகராட்சிக்குரிய பங்களிப்புத் தொகைக்கான கேட்பு ரூ. 20000/- ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டதின்படி மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வேண்டுப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மேற்படி தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ. 20000/- வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. 254

மன்றப்பொருள். [illegible]

செங்கோட்டை நகராட்சி தொழில்வரி வரிவிதிப்பு எண். 144/10111 என்ற எண் கொண்ட வரிவிதிப்பு எண்ணில் ஆணையாளர் மற்றும் சமுதாய அமைப்பாளர் தொழில்வரி தொகையினை நாளது தேதி வரை செலுத்தப்பட்டு வருகின்றார்கள். 2019-2020 இரண்டாம் அரையாண்டுக்கான தொகை ரூ.1250/-ஐ இந்நகராட்சியிலிருந்த திருராஜமாணிக்கம் ஆணையாளர் அவர்கள் 09.12.2019-ல் இந்நகராட்சியிலிருந்து சாத்தூர் நகராட்சிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். எனவே, இந்நகராட்சியில் 2019-2020 இரண்டாம் அரையாண்டிற்கான தொகை நிலுவையாக உள்ளது. ஆகையால் மேற்படி தொகை ரூ.1250/- ஐ நீக்கம் செய்தல் மட்டுமே 2020-2021 முதல் அரையாண்டிறிகான தொழில் வரி தொகையினை சமுதாய அமைப்பாளர் செலுத்த முடியும். எனவே, 2019-2020 இரண்டாம் அரை ஆண்டிற்கான தொகையினை நீக்கம் செய்ய அனுமதி வழங்கிட மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி தனி அலுவலர் அவர்களால் முன் அனுமதி வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. 255

மன்றப்பொருள்.. 9

செங்கோட்டை நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்கண்ட அரசு அலுவலகங்களில் பணிபுரியும் சில பணியாளர்களுக்குரிய 2019-2020 இரண்டாம் நிலுவை தொகை உள்ளதை சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களுக்கு கேட்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் நிலுவை தொகைக்கு உரிய பணியாளர்கள் அரசு உத்திரவின் கீழ் 2019-2020 இரண்டாம் அரையாண்டு காலகட்டத்தில் பணி இடமாற்றத்தின் காரணமாக வெளியூர் சென்று விட்டனர். எனவே அவர்களுக்குரிய தொழில் வரி நிலுவையினை ரத்து செய்ய கோரியுள்ளனர்.

| வரி விதிப்பு எண் | அலுவலகத்தின் பெயர் | அலுவலரின் பெயர் | நிலுவை ஆண்டு | தொகை |
|---|---|---|---|---|
| 10095 | தீயணைப்பு மீட்பு பணிகள் நிலையம் | 1.திரு.பிரஜுன்<br>2.திரு.சோடலைமணி<br>3.திரு.வேல்மணிகண்டன்<br>4.திரு.கதிர்சக்திராஜன் | 2019-2020 II | ரூ. 5000/- |
| 10097 | அரசு தொடக்கப்பள்ளி (ஆரியநல்லூர்) | திரு.குலியாம சங்கர் | 2019 - 2020II | ரூ.1250/- |
| 50100 | எஸ்.ஆர்.எம்.பி.மகளிர் மேல்நிலைப்பள்ளி | 1.திரு.முத்தண்ணன்<br>2.திருமதி.கஸ்தூரிபாயேசம்<br>3.திரு.ராமகிருஷ்ணன் | 2019 - 2020II | ரூ. 3750/- |
| 60002 | கூட்டுறவு பொருள் வழங்கல் பகுதி 3 தென்காசி | 1.திரு.ஜாண்ஜொல்டரி பீட்டர்<br>2. திரு.மணிகண்டன் | 2019 - 2020II | ரூ. 2500/- |
| | மொத்தம் | | | ரூ. 12500/- |

மேற்கண்ட விபரப்படி பணிமாறுதல் சென்று உள்ளதால் அவர்களின் அலுவலகங்களில் உள்ள நிலுவை தொகையான ரூ. 12,500/-யை வஜா செய்வதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தனி அலுவலர் அவர்களால் முன் அனுமதி வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. 256

மன்றப்பொருள்.- 10/9

செங்கோட்டை நகராட்சியின் 2019-20 ஆம் ஆண்டு கணக்கு தணிக்கை முடிவுற்ற நிலையில் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் இணைப்புகளுடன் தட்டச்சு மேற்கொண்டு அட்டை பைண்டிங் மற்றும் ஜெராக்ஸ் எடுத்து வழங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பெற்று குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள Q-Tel Computer and DTP Centre நிறுவன விலைவிகிதத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி முடிவு பெற்றதற்குரிய பட்டியல் ரூ. 5450/- வழங்கிட மன்ற அனுமதிக்கு

அலுவலககுறிப்பு.

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 264/பி1/2020)

மன்றப்பொருள்.- 11/9

செங்கோட்டை நகராட்சியில் 2020-21 நிதியாண்டில் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும், குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாலும், இந்நகராட்சியில் குழாய் பொருத்துநர் பணியிடம் காலியாக இருந்து வருவதாலும், தொய்வின்றி பணிகளை மேற்கொண்டிட குழாய் பொருத்துநர் தகுதிக்குட்பட்ட தொழிற்நுட்ப பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டுக்கு மட்டும் தனியார் சந்தை மூலம் பணியமர்த்தி கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 228 நாள் 20.04.2020ன் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 30.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தாரர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| செங்கோட்டை நகராட்சி பொறியியல் பிரிவிற்கு குழாய் பொருத்துநர் தகுதிக்குட்பட்ட தொழிற்நுட்ப பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டுக்கு மட்டும் தனியார் சந்தை மூலம் பணியமர்த்தி | (நாளொன்றுக்கு ரூ 660/-) வருடத்திற்கு ரூ 209220/- | திரு.எஸ்.பரமசிவன் | மதிப்பீட்டு விகிதம் |
| | | திரு.த.ஆபேல் ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 1.52 % அதிகம் |

அலுவலக குறிப்பு.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக மதிப்பீட்டு விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பரமசிவன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.